# ஊடக வெளியீடு

## அரச மற்றும் அரச சார்புத்துறையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பான தொகைமதிப்பு இன்று (17 நவம்பர் 2016) இன்று காலை 9.30 தொடக்கம் 11.30 வரை

தொ.இ: 94-11-2147001 தொ.ந: 94-11-2147011 இ-மெயில்: information@statistics.gov.lk

அரச மற்றும் அரச சார்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பான தொகைமதிப்பு, 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி காலை 9.30 தொடக்கம் 11.30 வரை அரச மற்றும் அரச சார்புத் துறையிலுள்ள சகல பணியாளர்களின் பங்களிப்புடன் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நடாத்துகிறது.

இத் தொகைமதிப்பின் நோக்கமானது அரச மற்றும் அரச சார்புத்துறையில் சேவை புரியும் சகல பணியாளர்களை கணக்கெடுத்தலும் மற்றும் அப் பணியாளர்கள் தொடர்பான சமூக மற்றும் பொருளாதார விபரங்கள் சேகரிக்கப்படவும் உள்ளன. இத் தொகைமதிப்பினூடாக சேகரிக்கப்படும் தகவல்கள் அரச சேவையை திட்டமிடவு கும் அதன் தராதரத்தை மென்மேலும் மேம்பாடடையச் செய்யவும் உயிர் நாடியாக உதவுகின்றது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்ஹ அவர்கள், சகல அரச மற்றும் அரச சார்புத்துறையில் சேவை புரியும் சகல பணியாளர்களையும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.statisticts.gov.lk) கிடைக்கக்கூடியதாகவுள்ள மூலங்களில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களையும், அவ்வேளை அரச மற்றும் அரச சார்புத்துறை நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட அச்சடிக்கப்பட்ட வழிகாட்டுதல்களையும் பின்பற்றும்படியும், அத்துடன் இத் தொகைமதிப்பை வெற்றிகரமாக்குவற்கு இன்று தொகைமதிப்பு வினாக்கொத்தை பூரணப்படுத்தி ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறார்.

கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

Translate.
16/11/17.